**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**FAST TRACK COURT AT MAGISTERIAL LEVEL,PATTUKKOTTAI**

| | |
|---|---|
| **STC. No.** | **32/2024** |
| **பெயர்:** | **சரவணகுமார்** |
| **தந்தை பெயர் :** | **ராஜகோபால்** |
| **வயது:** | **54/2025** |
| **ஊர்:** | **பட்டுக்கோட்டை** |
| **தாலுக்கா** | **பட்டுக்கோட்டை** |
| **வேலை** | **விவசாயம்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of **25th day of November 2025 (25.11.2025)**

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11:48AM**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**
**எதிரி ஆஜர்.**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான திரு. எஸ். குமார், (பலகை எழுத்தர் நிலை -III ) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

1. நான் தாக்கல் செய்த நிரூபணவாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான், அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் பண்ணிரெண்டாம் வகுப்பு படித்துள்ளேன். நான் விவசயாம் செய்து வருகிறேன்.
2. நான் எதிரிக்கு 04.11.2023 ஆம் தேதியில் கடன் கொடுத்தேன். ரூ.15,00,000/- ரூபாய் கடனாக கொடுத்தேன். ரூ.15,00,000/- ரூபாய் தொகை எனக்கு எந்த வருமாணத்தின் மூலம் கிடைத்தது என்றும், அந்த

தொகையை எதன்மூலம் எதிரிக்கு கொடுத்தேன் என்றும் நான் என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மனு, நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்று சொன்னால், சரிதான். நான் வருமானவரி தாக்கல் செய்வேனா என்றால், செய்துவருகிறேன். நான் 2023 - 2024 ஆண்டுகளில் வருமாணவரி தாக்கல் செய்துள்ளேனா என்றால், செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வருமானவரி கணக்கில் எதிரிக்கு கொடுத்த ரூ.15,00,000/- ரூபாயை குறிப்பிட்டுள்ளேனா என்றால், இல்லை.

3. எதிரியானவர் என்ன தொழில் செய்கிறார் என்று எனக்கு தெரியுமா என்றால், Bar மற்றும் மீன் பிடிக்கும் Boat வைத்து நடத்திவருகிறார். நான் எதிரிக்கு கடன் கொடுத்த தேதியன்றும் Bar மற்றும் மீன் பிடிக்கும் Boat வைத்து நடத்திவந்தார். நான் என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மனு, நிரூபண வாக்குமூலத்தில் Bar நடத்துவதற்காக கடன் கேட்டார் என் விபரத்தினை கூறவில்லை என்று சொன்னால், சரிதான். மீன் பிடிக்கும் படகுகள் மீன் பிடி தொழில் செய்யும் மீனவர்களுக்கு மட்டும் பிரத்யேகமாக வழங்கப்படும் உரிமம் என்றும், எதிரியானவரிடம் அந்த உரிமம் இல்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

4. நான் ரூ.15,00,000/- ரூபாய் எதிரிக்கு கொடுத்ததற்கு முன்பு எதிரி என்னிடம் ஏதேனும் கடன் அதற்கு முன் பெற்றுள்ளாரா என்றால், பெற்றுள்ளார். அதைபோல், அவரிடம் கடன்கொடுக்கும்போது எதிரியின் வங்கி கணக்கு காசோலையை வாங்கிக்கொள்வேனா என்றால், இல்லை. நான் ரூ.15,00,000/- ரூபாய் கடன் கொடுப்பதற்கு முன்பாக எந்த தேதியில் எதிரிக்கு முன்னர் கடன்கொடுத்த விபரம் எனக்கு ஞாபகம் இல்லை.

5. ரூ.15,00,000/- கடன் கொடுத்ததற்கு எதிரியிடம் நான் என்னென்ன ஆவணங்கள் பெற்றுக்கொண்டேன் என்றால், காசோலை மட்டும் வாங்கிக்கொண்டேன். எதிரியானவர் எனக்கு எந்த காசோலை என்றால், TMB காசோலை கொடுத்தார். அந்த காசோலையில் பூர்த்தி செய்த விபரம் மற்றும் காசோலை எண் என்னவென்றால், ரூ.15,00,000/- மற்றும் 06.12.2023 தேதியிட்டு என் பெயரான சரவணகுமார் என்று உள்ளது. மேற்படி விபரத்தினை எதிரியானவர் என் வீட்டில் வைத்து எதிரியே

பூர்த்தி செய்தார். மேற்படி உள்ள வழக்கு காசோலையில் உள்ள விபரங்களினை எதிரியானவரே என் வீட்டில் வைத்து பூர்த்தி செய்தாரா என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. எதிரியானவர்தான் காசோலையை பூர்த்தி செய்தாரா என்பதற்கு அவருடைய ஏற்றுக்கொள்ளக் கூடிய கையெழுத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தெரியவரும் என்று சொன்னால், எனக்கு தெரியாது.

6. எதிரியானவர் எனக்கு எந்த உறவுமுறைக்காரர் என்றால், எனது பாட்டியும், எதிரியின் பாட்டியும் உடன்பிறந்த சகோதரிகள் ஆவார். அந்த இரு பாட்டிகளுக்கும் உள்ள சொத்துக்கள் பாகம் பிரிக்காமல் இருந்துவருகிறது என்று சொன்னால், எனக்கு தெரியாது. என்னுடைய பாட்டியின் பெயர் தையலம்மை. எதிரியின் பாட்டியின் பெயர் இலட்சுமியம்மாள். எனது பாட்டி தையலம்மை இறந்தபின் அந்த சொத்து எனக்கு வந்ததா என்றால், வந்தது. எதிரியின் பாட்டியான இலட்சுமியம்மாளின் சொத்துக்களை இலட்சுமியம்மாளுக்கே இன்னும் பிரித்துதராமல் இருப்பதால் அவர்களுடன் பிரச்சனை இருந்துவருகிறது என்று சொன்னால், சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம் 12:20 PM**

**(எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.